**தலைப்பு 310 – அரசாங்க தொழிற்சாலை திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 310 – அரசாங்க தொழிற்சாலை திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அரசாங்க தொழிற்சாலை திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 யூன் 24 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூலை 25 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசாங்க தொழிற்சாலை திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக

ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்
### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| சொத்துக்களை இனங்காணும் குறியீடுகளை உள்ளடக்காமையின் காரணமாக சிகாஸ் மூலம் பேணிச்செல்லப்படுகின்ற நிலையான சொத்து அறிக்கையில் பொருட்கள் மெய்மையாய்வு அறிக்கையில் காணப்படுகின்ற சொத்துக்கள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டமையும் சொத்துக்கள் விற்றுத்தீர்க்கும் போது எந்த வகையான சொத்துக்கள் அகற்றப்பட்டிருந்தது எனவும், எந்த சொத்துக்கள் திணைக்களத்தில் காணப்படுகின்றது எனவும் இனங்காண்பதற்கு கணக்காய்வில் முடியாதிருந்தது. அவ்வாறே நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற ரூபா 1,009,227,853 பெறுமதியான சொத்துக்கள் உள்ளபடியாக திணைக்களத்தில் பௌதீக | சிகாஸில் உள்ளடக்கப் பட்டுள்ள சொத்துக்களுக்காக குறியீட்டு இலக்கம் உள்ளடக்குதல் குழுவொன்றின் ஊடாக மேற்கொள்ளப்பட்டு சீகாஸ் மூலம் பேணிச் செல்லப்படுகின்ற நிலையான சொத்துக்கள் மற்றும் நிலையான சொத்துப் பதிவேட்டை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | கணக்கீடு செய்யப்பட்டுள்ள பொருட்கள் உள்ளபடியாக பௌதீக ரீதியில் காணப்படுகின்ற சரியான பொருட்களின் அளவு என உறுதிப்படுத்துதல் வேண்டும். |

ரீதியில் காணப்படுகின்ற சொத்துக்கள் மாத்திரமாக இருந்ததை உறுதிப்படுத்தப்பட வில்லை.

**(ஆ) களஞ்சிய முற்பணக் கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| i. | நிதிப் பிரமாணம் 501 இன் பிரகாரம் களஞ்சிய முற்பணக் கணக்கு இலாபம் உழைக்கின்ற நோக்கில் அல்லது நட்டத்தை எதிர்பார்க்காத வகையில் இருந்ததுடன் பொருட்கள் கொள்வனவு செய்யப்படுகின்ற விலையில் பொருள் இருப்பு கணிப்பீடு செய்யப்படுகின்றது. எனினும் பொருட்கள் கொள்வனவு செய்வதற்கு, களஞ்சியப்படுத்துவதற்கு மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக ஏற்படுகின்ற செலவினங்களை மேவுகை செய்யும் வகையில் கிரயத்தில் 10 சதவீதம் முதல் 06 மாதங்களுக்காகவும், 08 சதவீதம் இறுதி 06 மாதங்களுக்காகவும் சேர்க்கப்பட்டு இருப்பு விநியோகிக்கப்படுகின்றமை 2023 இன் களஞ்சிய முற்பணக் கணக்கில் முற்குறிப்பில் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக விநியோகித்தல் கிரயம் மற்றும் ஏனைய ஊழியம் மற்றும் வழங்கல் செலவினங்கள் கழிக்கப்பட்ட பின்னர் ரூபா 5,437,455 மிகை யொன்று (மொத்த செலவினத்தை விஞ்சி விநியோகித்தல்) கணக்கில் காண்பிக்கப்படுகின்றது. | பிரதான களஞ்சியத்தில் ஊழியர் செலவினம் மற்றும் வழங்கல் செலவினங்களை மேவுகை செய்வதற்காக விநியோகித்தல்களில் ஏதாவது ஒரு சதவீதம் சேர்க்கப்படுகின்றது. (MOH வீதம்) இதில் இலாபம் அல்லது அடிப்படையாகக் ஆண்டில் விநியோகிக்கும் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகின்றது. 2022 ஆம் ஆண்டில் ரூபா 19 மில்லியன் இலாபம் காணப்பட்டமையால் MOH 8 வீதம் வரை 2023 ஆம் ஆண்டில் கழிக்கப்பட்டிருந்தது. ஆண்டில் விநியோகித்தலை கவனத்திற் கொண்டு MOH பெறுமதி மாற்றப்பட வேண்டியிருக்குமாயின் குழு ஒன்றின் மூலம் அதனை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ii. | மீளாய்வாண்டில் களஞ்சிய முற்பணக் கணக்கில் வேலை முற்பணக் கணக்கில் விநியோகிக்கப்பட்ட மூலப் பொருள் கிரயம் ரூபா 111,541,429 ஆக இருந்ததுடன் இந்த விநியோகித்தலில் கணிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 127,685,080 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் களஞ்சியப்படுத்தல் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கான செலவினங்களை மேவுகை செய்வதற்காக | மீளாய்வாண்டில் விநியோகிக்கப்பட்ட மூலப் பொருள் கிரயம் ரூபா 111,541,429 ஆக இருந்ததுடன் தேறிய விநியோகித்தல் ரூபா 127,685,080 ஆகும். அதனால் செலவினங்களை விஞ்சிய | முற்குறிப்பில் காண்பிக்கப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ரூபா 16,143,651 பெறுமதி சேர்க்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்தப் பெறுமதி விநியோகித்தல்களின் கிரயத்தில் 14.5 சதவீத அளவாக இருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | மொத்த விநியோகித்தல் ரூபா 16,143,651 ஆக இருந்ததுடன் அப் பெறுமதி விநியோகித்தல் கிரயத்தில் 14.5 சதவீத அளவாக இருந்தது. அதில் ரூபா 10,706,195 ஊழியர் செலவினம் மற்றும் வழங்கல் செலவினத்தை விஞ்சி விநியோகித்தல் ரூபா 5,437,455 ஆக இருந்ததுடன் அது விநியோகித்தல் கிரயத்தில் 4.8 சதவீதமாக இருந்ததை அறியத் தருகின்றோம். | |

**(இ) ஆற்றப்பட்ட வேலை முற்பணக் கணக்கு**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| i. | மீளாய்வாண்டில் களஞ்சிய முற்பணக் கணக்கில் மிகையான ரூபா 5,437,456 ஆற்றப்பட்ட வேலைக் கணக்கில் உப பிரிவாக சீராக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக உற்பத்திக் கிரயம் ரூபா 5,437,456 இனால் குறைத்துக் காண்பித்து இலாபம் அப் பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப் பட்டிருந்தது. அதனால் 2023 ஆம் ஆண்டின் போது ஆற்றப்பட்ட வேலை முற்பணக் கணக்கில் காண்பிக்கப்பட்ட ரூபா 5,377,653 ஆன நட்டம், அந்த சீராக்கங்கள் மேற்கொள்ளப்படாதிருக்குமாயின் ரூபா 10,815,109 நட்டம் வரை அதிகரிப்பதற்கு காரணமாக இருந்தது. அதற்கு மேலதிகமாக களஞ்சிய முற்பணக் கணக்கிற்கு உரிய ஊழியர் மேலதிக நேரம், மிகை ஊதியம், மற்றும் போக்குவரத்துச் செலவினங்களின் கூட்டுமொத்தம் ரூபா 10,706,195 தொகையும் உற்பத்திக் கிரயம் கணிப்பிடும் போது கழிக்கப்பட்டிருந்தது. இந்த நிலைமையினைக் கவனத்திற் கொள்ளும் போது நட்டம் அப் பெறுமதியாலும் அதிகரித்திருந்தமையும் அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் | காணப்படுகின்ற குறைபாடுகளை சரி செய்வதற்கு எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறே 8001, 8002 வேலைப் பத்திரங்களின் கீழ் வேலைகளுக்காக ஈடுபடுத்தப்படுகின்ற ஊழியர்களுக்கு சம்பளம் ஆற்றப்பட்ட வேலை முற்பணக் கணக்கின் கீழே செலுத்தப்படுகின்ற போதும் உரிய செலவினங்கள் உள்ளபடியாக உரிய செலவினங்கள் களஞ்சிய முற்பணக் கணக்கின் செலவினத்தின் கீழேயே உள்ளபடியாக செலுத்தப் படுகின்றது. அதனால் களஞ்சிய முற்பணக் கணக்கிற்கு செலவினம் ஒன்றைச் செய்து ஆற்றப் பட்ட வேலை முற்பணக் கணக்கில் செலவு | களஞ்சிய முற்பணக் கணக்கில் மிகையில் ஆற்றப்பட்ட வேலை முற்பணக் கணக்கில் சீராக்காதிருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆற்றப்பட்ட வேலை முற்பணக் கணக்கின் மொத்த நட்டம் ரூபா 21,521,304 ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | பொறுப்பில் வைக்கப்பட்டு செலவினத்தை அகற்றுதல் இதன் போது மேற்கொள்ளப்பட்டது. | |
| ii. | 2023 ஆம் ஆண்டில் விற்பனையாக ரூபா 243,243,793 நிதிக் கூற்றில் காண்பிக்கப்பட் டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| * | கணக்கீட்டு கொள்கை தொடர்பான கூற்றில் வருமானங்களை இனங்காணல் தொடர்பாக காண்பிக்கப்பட்டுள்ள கொள்கை களுக்கு முரணாக விற்பனைப் பட்டியலில் ஆற்றப்பட்ட வேலைப் பட்டியலின் பெறுமதியாக உள்ளபடியான செலவினம் அல்லாத தொகையே காண்பிக்கப்பட்டதுடன் அதனை விட அதிகரித்த பெறுமதியான மொத்த மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ஆகும். மேலும் 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்படாத வேலை பத்திரங்களுக்காக பட்டியல் சமர்ப்பித்து கடன் விற்பனையாக கடன் பட்டோராக கணக்கீடு செய்யப்பட்டமையால் விற்பனைப் பெறுமதி மற்றும் கடன் பட்டோர் அதிகரித்த பெறுமதியில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | முழுமையாக அல்லது பகுதியாக பூர்த்தி செய்யப்பட்ட பணிகளுக்காக உரிய பூர்த்தி செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதியில் மாத்திரம் பட்டியல் விநியோகித்தல் பொதுவான முறையாக இருந்ததுடன் நுகர்வு கோரிக்கையின் அடிப்படையில் அந்த நிறுவனங்களில் இருந்து எமக்கு செலுத்தும் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்காக அந்த நிறுவனங்களின் கோரிக்கையின் அடிப்படையல் சில சந்தர்ப்பங்களில் பட்டியல் விநியோகிக்கப்படுகின்றது. | கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம் பூர்த்தி செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதியில் பட்டியல் விநியோகிக்கப்பட ல் வேண்டும். |
| * | வேலைப் பத்திரங்களில் உள்ளபடியான செலவினங்கள் வேலைப் பத்திரத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியை விட அதிகரித்த பெறுமதியைக் கொண்டிருக்கின்ற சந்தர்ப்பம் அவதானிக்கப்பட்டதுடன் இதன் காரணமாக செலவினங்கள் செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த செலவினங்கள் பட்டியலில் இடப்படாமையால் உள்ளபடியான செலவினமான தொகையை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | இதன் போது உரிய தொகை நுகர்வு நிறுவனத்தின் மூலம் அறவிடுவதற்கு நியாயமான காரணம் மற்றும் சந்தர்ப்பங்கள் காணப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது நுகர்வு நிறுவனத்திற்கு மேலதிகமாக மதிப்பீடொன்று அனுப்பி அதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம் பூர்த்தி செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதிக்கு பட்டியல் விநியோகிக்கப்பட ல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| iii. | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 102 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிச் செயலாற்றல் கூற்றில் வரிசை விடயங்கள் உள்ளடக்க வேண்டியிருந்த போதிலும் தளபாடங்களின் பெறுமானத் தேய்வு நேரடியாக நிதி செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | 2024 இன் கணக்குகள் தயாரிக்கும் போது இந்தப் பெறுமதி நிருவாக செலவினத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| iv. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் 54 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனம் ஒன்றினால் முன்னைய காலப் பகுதியில் தவறுகள் தொடர்பாக தவறின் தன்மை, இயலுமான வரை நிதிக்கூற்றுக்களில் வரிசை விடயங்களுக்காக சரிசெய்ய வேண்டிய தொகை, சமர்ப்பிக்கப்பட்ட பழைய முன்னைய காலப் பகுதியின் ஆரம்பத்தில் சரிசெய்யப்பட்ட அளவு மற்றும் கடந்தகால ரீதியில் மீண்டும் வெளியிடுதல் நடைமுறைக்குப் பொருந்தாதிருந்திருக் குமாயின் அந்த நிலைமையில் ஏற்படுத்துவதற்கான காரணங்கள் மற்றும் தவறை சரி செய்யப்படுமாயின் எந்தக் காலப் பகுதியில் இருந்து என்பது தொடர்பான விபரங்கள் போன்றவற்றை வெளியிட வேண்டியிருந்த போதிலும் முன்னைய ஆண்டின் சீராக்கமாக உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் திரண்ட இலாபத்திற்காக ரூபா 45,689,802 சீராக்கல் தொடர்பாக நிதிக்கூற் றுக்களில் எந்தவொரு வெளிப்பத்தலும் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் போது முத்திரை வரி மற்றும் பெறுமதி சேர் வரி அகற்றப்பட்ட மீதிக்காக 2023 ஆம் ஆண்டின் போது காசுப் பெறுவனவுகள், பட்டியல் இரத்துச் செய்தமை, முன்னைய ஆண்டின் இருப்பு விநியோகித்தல் கிரயத்தை சரி செய்தல், கடன்பட்டோர் பெறுவனவுகளை சரிசெய்தல் மற்றும் தொழிற்படு நட்டத்தை தீர்த்துவைத்தலாக சீராக்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| v. | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உப கரணங்களைக் கணக்கீடு செய்யும் போது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களின் பொறுப் புக்களில் காண்பிக்கப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படவில்லை. அதன் பிரகாரம் நிலையானது சொத்துக்களில் ஆரம்ப மீதி, சேர்த்தல்கள், அகற்றுதல்கள், நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் பெறுமானத் தேய்வு, மொத்த இழிவுப் பெறுமதி, திரண்ட பெறுமானத் தேய்வு, | அந்த நியமத்திற்கு இணங்க விபரங்களைச் சமர்ப்பித்தல் இறுதிக் கணக்கின் பக்க இலக்கம் 15 இன் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்த படிவத்தில் விருத்தி செய்யப்பட வேண்டிய விடயங்கள் சில உள்ளன. அவற்றை எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தேறிய இழிவுப் பெறுமதி போன்ற ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் குறிப்பில் உள்ளடக்க வேண்டியிருந்த போதிலும் அதில் ‘‘நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் இறுதி மீதி’’ ஆக தேறிய பெறுமதிக்குப் பதிலாக கிரயத்தில் கிரயம் குறிப்பிடப்பட்டிருந்தது. | | |
| vi. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07இன் 86ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் ஒவ்வொரு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் வகுப்பு தொடர்பாக ஆண்டின் ஆரம்பத்தில் மற்றும் இறுதியில் திரண்ட பெறுமானத் தேய்வு பெறுமதியைக் குறிப்பிடுவதன் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2024 இன் கணக்குகள் சமர்ப்பிக்கும் போது இந்தத் தகவல்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| vii | தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் பிரகாம் ரூபா 4,558,836 பெறுமதி 2023 ஆம் ஆண்டில் ஆற்றப்பட்ட வேலைக் கணக்கில் அகற்றப்பட்ட மடி கணனி அல்லது மேசைக் கணனி மற்றும் கணின் துணைப்பாகங்கள் போன்ற நிலையானது சொத்துக்களில் 50 விடயங்கள் 2022 ஆம் ஆண்டில் அல்லது 2023 ஆம் ஆண்டில் நிலையானது சொத்துக்களை மெய்மையாய்வின் பொது 66 அல்லது 47 படிவத்தில் உள்ளடக்கப்படாமையின் காரணமாக அந்த சொத்துக்கள் சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் பேணிச் செல்லப்படுகின்ற அறிக்கையினைப் போன்று நிதிக் கூற்றுக்களிலும் உள்ளக்கப் பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்படவில்லை. | இந்த விடயங்கள் உரிய பிரிவு களுக்குரிய பொருட் பதிவேடுப் புத்தங்களில் கீழே குறிப்பிடப் படுகின்ற பிரகாரம் உள்ளடக்கப் பட்டுள்ளது. அந்த ஆண்டிற்குரிய திறைசேரி 66 மற்றும் பொது 47 பரிசோதனைக்காக போதியளவான காலம் தேவையாகும். | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படுகி ன்றமையை உறுதிப்படுத்திய சொத்துக்கள் மாத்திரம் அகற்றப்படல் வேண்டும். |
| Vi ii. | 2023 இன் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் மாற்றப்பட்ட 04 வேலைகளில் உபகரணங்களை கருவிகளின் மெய்மை ஆய்வு அறிக்கை உள்ளபடியான பெறுமதி உள்ளடக்கப்படாதிருந்ததுடன் ‘சீ’ பிரிவில் ரூபா 5,947,315 பெறுமதியான 288 இருப்பு விடயங்கள் மற்றும் ‘ஜீ - ஒயில்’ ரூபா 1,967,868 பெறுமதியான 16 இருப்பு விடயங்கள் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | மெய்மையாய்வு சபைத் தலைவருக்கு தவறொன்றினால் உள்ளபடியான மீதி உள்ளடக்கப்படா திருந்ததுடன் தற்போது அந்த உள்ளபடியான மீதி மீண்டும் உறுதிப்படுத்தி பொது 66 அறிக்கையில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பொருள் மெய்மையாய்வு அறிக்கை முழுமையாக சரியாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| ix. | 2022 திசம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் காணப்பட்ட கடன்பட்டோர் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 36,941,553 ஆக இருந்த போதிலும் பதிவழிப்பதற்காக அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்துடன் குழு அறிக்கையின் பிரகாரம் அந்த பட்டோரில் கூட்டுமொத்தம் ரூபா 4,045,992 ஆகும். அவ்வாறு இருக்கும் போது நிதிக் கூற்றுக்களில் 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளுக் குரிய மேலே குறிப்பிடப்பட்ட ரூபா 36,941,553 ஆன மொத்த மீதி பதிவழிக்கப்பட்டிருந்தது. | 2008 ஆம் ஆண்டில் கடன்பட்டோரிடம் தொடர்புடைய அரச நிதித் திணைக்களத்தின் அங்கீகாரம் கோரப்பட்டிருந் ததுடன் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்க முடியாதிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் இந்த கடிதம் தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்திற்கு அனுப்பப் பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் கிடைக்கின்ற ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப் படுமென அறியத்தருகின்றோம். | உரிய அங்கீகாரமின்றி கடன்பட்டோரை பதிவழிக்காதிருத்தல் வேண்டும். |

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| i. | வேலை நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டியதாகக் காணப்பட்ட 10 இற்கும் 20 வருடங்களுக்கும் இடையிலான பழைய ரூபா 142,650 கடன் மீதி இது வரை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | அந்த கடன் மீதியை பதிவழிப்பதற்கு உரிய நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் மூலம் அனுப்பப் பட்டிருந்ததுடன் அது தொடர்பாக அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததா எனவும் மற்றும் கடன் காப்புறுதின் கீழ் உரிய கடன் மீதியின் அறவிடுவதற்கு உள்ள இயலுமை தொடர்பாகவும் அமைச்சிற்கு அறிக்கையிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பிணையாளர்களிடமிருந்து அல்லது கடன் காப்புறுதி பத்திரங்களின் மூலம் கடன் மீதியை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| ii. | சேவையை விட்டுச் சென்ற 13 உத்தியோகத்தர்களிடமிருந்து 20 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 59,800 மீதி, 10 இற்கும் 20 வருடங்களுக்கும் இடையிலான ரூபா 282,880 மீதி, 05 இற்கும் 10 வருடங்களுக்கும் இடையில் அறவிட வேண்டியதாகக் காணப்படுகின்ற ரூபா 227,550 மீதி மற்றும் ரூபா 82,360 ஆன 01 இற்கும் 03 வருடங்களுக்கும் இடையிலான ஏனைய கடன்கொடுத்தோர் மீதிகள் என்பன இதுவரை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | சட்டமா அதிபர் திணைக்களம், ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம் மற்றும் உரிய பொலிஸ் நிலையங்களின் மூலம் தகவல்களை விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படுகின்றமையினால் இந்தக் கடன் மீதியை தவணைப் பணமாக அறவிடப் பட்டுள்ள பெறுமதி ரூபா 394,950 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 257,640 பெறுமதிக்காக சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | வேலையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்கள் தொடர்பான தகவல்களை விசாரித்து கடன் மீதியை விரைவாக அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**(உ) பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் பேணிச்செல்லப்படாமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| i. | **நிலையான சொத்துக்கள் பதிவேடு** | | |
| | 2022 திசம்பர் 13 ஆம் திகதிய இலக்கம் 2022/05 என்ற அரச கணக்குகள் வழிகாட்டியின் 8.1 ஆம் பந்தியின் பிரகாரம் சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் நிலையான சொத்துக்கள் மொடியுள் மூலம் சொத்துக்கள் பதிவேடு தயாரித்து நாளதுவரையாக பேணிச்செல்லப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துப் பதிவேடை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சீகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் நிலையான சொத்துக்கள் மொடியுள் மூலம் நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கி பேணிச் செல்லப்படுகின்றது. |
| ii. | **இருப்பு புத்தகம்** | | |
| | நிதிப் பிரமாணம் 751 மற்றும் 763 இன் பிரகாரம் இருப்புப் புத்தகம் பேணிச்செல்லப்பட்டிருக்க வில்லை. | இருப்பு பதிவேட்டில் காணப்படு கின்ற இருப்பு குறைபாடுளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் இருப்பு புத்தகம் பேணிச்செல்லப்படல் வேண்டும். |

iii. **இழப்பு மற்றும் நட்டப் பதிவேடு**

| | | |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 110 இன் பிரகாரம் இழப்புத் தொடர்பான பதிவேடு நாளதுவரையாக பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டு முதல் நாளதுதுவரையாக்கப்படுகின்றது. | இழப்பு தொடர்பான பதிவேடொன்று பேணிச் செல்லப்படல் வேண்டும். |

iv. **பொறுப்புக்கள் பதிவேடு**

| | | |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு நாளதுவரையாக பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டில் இருந்து நாளதுதுவரையாக்கி பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொறுப்புக்கள் தினந்தோறும் பரீட்சிக்கக்கூடிய வகையில் பொறுப்புக்கள் பதிவேட்டில் அந்தப் பொறுப்புக்கள் குறிப்பிடப்படல் வேண்டும். |

**(ஊ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| i. | மீளாய்வாண்டின் போது ஆற்றப்பட்ட வேலை முற்பனக் கணக்கில் ரூபா 3,495,038 நேர் கொள்வனவுக்குரிய விரிவான பட்டடோலை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையினால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுதிப்பணடுத்த முடியாதிருந்தது. | கொடுப்பனவுகளின் பகுப்பாய்வு உங்களுக்கு மின்னஞ்சல் மூலம் சமர்ப்பிக்கப்பட்டடுள்ளது. மேலும் உறுதிச் சீட்டுக்களின் விபரங்களும் இதனுடன் சமர்ப்பிக்கப்படும். | நிதிக் கூற்றுக்களின் மீதிகளுக்காக உரிய விரிவான பட்டோலை பேணிச் செல்லப்பட வேண்டும். |
| ii. | மீளாய்வாண்டின் போது ஆற்றப்பட்ட வேலை முற்பனக் கணக்கில் ரூபா 1,798,386 நானாவித செலவினங்களுக்குரிய விரிவான பட்டோலை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையினால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப் படுத்த முடியாதிருந்தது. | கொடுப்பனவுகளின் பகுப்பாய்வு உங்களுக்கு மின்னஞ்சல் மூலம் சமர்ப்பிக்கப்பட்டடுள்ளது. மேலும் உறுதிச் சீட்டுக்களின் விபரங்களும் இதனுடன் சமர்ப்பிக்கப்படும். | நிதிக் கூற்றுக்களின் மீதிகளுக்காக உரிய விரிவான பட்டோலை பேணிச் செல்லப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| iii. | மீளாய்வாண்டின் போது ஆற்றப்பட்ட வேலை முற்பணக் கணக்கில் ரூபா 1,682,924 பெறுமானத் தேய்வு ஒதுக்கக் கணக்கிற்குரிய விரிவான பட்டோலை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையினால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப் படுத்த முடியாதிருந்தது. | இது தொடர்பான தகவல்கள் காணப்படுகின்ற கோவை கண்டறிய முடியாதுள்ளது. | நிதிக் கூற்றுக்களின் மீதிகளுக்காக உரிய விரிவான பட்டோலை பேணிச் செல்லப்பட வேண்டும். |
| iv. | ரூபா 53,161,909 பெறுமதியுடைய ஆற்றப்பட்ட வேலை முற்பணக் கணக்கிற்குரிய 2021 ஆம் ஆண்டின் போது பதிவழிக்கப்பட்ட கடனட பட்டோருக்காக உரிய அங்கிகாரம் இல்லாமலிருந்தமையின் காரணமாக கடன் பட்மோரை பதிவழித்தல் கணக்காய்வில் ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | இது தொடர்பக டீதசிய வரவு செலவுதிட்ட திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் எதிர்காலதில் கிடைக்கின்ற ஆலோசனையின் பிரகாரம் (MUDH/HC/F/02/02/08) நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | 2021 ஆம் ஆண்டில் பதிவழிக்கப்பட்ட கடன்பட்டோருக்காக முறையான அங்கீகாரம் ஒன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| v. | மீளாய்வாண்டின் போது ஆற்றப்பட்ட வேலை முற்பணக் கணக்கில் ரூபா 8,096,087 தொகை வெளித்தரப்பினரிடமிருந்து பெறப்பட்ட சேவை செலவினங்களுக்கு உரிய விரிவான பட்டோலை கணன்னாய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையினால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | கொடுப்பனவுகளின் பகுப்பாய்வு உங்களுக்கு மின்னஞ்சல் மூலம் சமர்ப்பிக்கப்பட்டடுள்ளது. மேலும் உறுதிச் சீட்டுக்களின் விபரங்களும் இதனுடன் சமர்ப்பிக்கப்படும். | நிதிக் கூற்றுக்களின் மீதிகளுக்கு உரிய விரிவான பட்டோலைக் கணக்கு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| vi. | மீளாய்வாண்டின் போது ஆற்றப்பட்ட வேலை முற்பணக் கணக்கில் ரூபா 278,829 வெளித்தரப்பினரிடமிருந்து பெறப்பட்ட செயற்றிட்டம் அல்லாத செலவினங்களுக்குரிய விரிவான பட்டோலை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையினால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | கொடுப்பனவுகளின் பகுப்பாய்வு உங்களுக்கு மின்னஞ்சல் மூலம் சமர்ப்பிக்கப்பட்டடுள்ளது. மேலும் உறுதிச் சீட்டுக்களின் விபரங்களும் இதனுடன் சமர்ப்பிக்கப்படும். | நிதிக் கூற்றுக்களின் மீதிகளுக்கு உரிய விரிவான பட்டோலைக் கணக்கு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

**அவதானிப்புக்கள்**

| | சட்டங்கள்,விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி (ரூபா) | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாகக் கோவை | | | | |
| i. | நிதிப்பிரமானம் 504(2) | - | ஓவ்வொரு காலாண்டின் இறுதியின் போது சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ப இலாப நட்டக் கணக்கு தயாரித்தல் தொழிற்படு நட்டத்தை தீர்ப்பது தொடர்பான நிதியேற்பாட்டை பெற்று பெறுகின்ற நடவடிக்கைகளாக ஈடுபடுத்த வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு கணக்கொன்று தயாரித்து பிரதான கண்கீட்டு உத்தியோகத்தருக்கும் கணக்காய்வு தலைமை அதிபதிக்கு பிரதியுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2024 ஆம் ஆண்டு கணக்காய்வு அவதானிப்பின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | சந்தர்ப்பத்திற்கு ஏற்ப இலாப நட்டக் கணக்கு தயாரிக்கப்படல் வேண்டும். |
| ii. | நிதிப்பிரமாணம் 571(3) | 1,037,461 | இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் தீர்த்து வைக்கப்படாத கேள்வி வைப்பு தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | உரிய கோவைகள் பரீட்சித்து நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| iii. | நிதிப்பிரமாணம் 1645 | - | பேணிச் செல்லவேண்டிய வாகன சம்பவத் திரட்டுப் புத்தகம் நாளதுவரையாக பேணிச் செல்லப்பட்டிருக்க வில்லை. | இவ்வாறான பதிவேடொன்று தொடர்பாக கண்டறிவதற்கு முடியாதுள்ளது. | சம்பவத்திரட்டு புத்தகத்தை நாளதுவரையாக பேணிச்செல்ல வேண்டும். |
| (ஆ) | திறைசேரி செயலாளரின் இலக்கம் MF/CG/02/(iv) மற்றும் 2017.06.28 ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட 01/2017 என்ற சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | - | சொத்துக்கள் மற்றும் கிரய முகாமைத்துவத்திற்காக அரசாங்கத்தின் சகல நிதியல்லா சொத்துக்கள் பதிவேடுகளின் கீழ் கொம்ட்ரோலர் ஜெனரால் அனுகவேண்டிய தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வில்லை. | இது தொடர்பாக கொம்ட்ரோலர் ஜெனரால் மூலம் விசாரணை செய்யும் போது வாகன தகவலை உள்ளடக்குமாறு அறிவிக்கப் பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | 2023 நவம்பர் 30 ஆம் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 05/2023 சுற்றறிக்கையின் 3.3 ஆம் பந்தி | - | உடன்பட்டிருந்த கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தனித்தனியாக வெளிப்படுத்தப்படடிருக்க வில்லை. | உரிய சரி செய்தல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | அரச கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தூர நோக்கு மற்றும் செயற்பணி

இயந்திர பொறியியல் ரீதியான பணிகளை நிறைவேற்றுவதற்காக ‘ஏ’ வகுப்பின் திணைக்களமொன்றாக அரசாங்கத்தின் 1971 சனவரி 10 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்ட அரசாங்க தொழிற்சாலை திணைக்களத்தின் தூர நோக்கு, நிலைபேறான அபிவிருத்தி மூலம் எதிர்கால இலங்கையின் இயந்திர பொறியியல் துறையில், உற்பத்தி, சேவை, பயிற்சி வழங்குகின்ற அதிசிறந்த அரசாங்க நிறுவனமாக எற்படுத்துதல் ஆகும். திணைக்களத்தின் பணிகளாக உற்பத்தித் துறை, நிர்மாணத் துறை, (பாரந் தூக்கி) பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு துறைகள் மற்றும் இயந்திர பொறியியலாளர் ஆலோசனை சேவை என்ற 04 துறைகளின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது.

### 3.2 பிரதான பணிகளுக்கு முரணான செயற்பாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கட்டிட நிர்மாண செயற்திட்டத்தை நிறைவேற்றுதல் திணைக்களத்தின் பணி இல்லாதிருந்த போதிலும் வெகுசன ஊடகத்துறை அமைச்சின் பழைய மேடை கட்டிடத்தை நவீனமயப்படுத்தும் செயற்திட்டத்தை நிறைவேற்றும் ஒப்பந்தம் கையேற்கப்பட்டு 2019 ஆகஸ்ட் 26 ஆம் திகதி பத்திரிகை அறிவித்தல் பிரசுரித்து திறந்த கேள்வி கோரி ரூபா 16,510,934 (வற் இன்றி) ஒப்பந்த பெறுமதியில் வெளி ஒப்பந்தகாரருக்கு கையளிக்கப் பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது. | | |
| i. | இதன் போது காணி நிலம் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத் தின் கீழ் கம்பனி ஒன்றான (REDECO) ரூபா 14,376,520 பெறுமதியில் வேறொரு தனியார் கம்பனியொன்று ரூபா 16,510,934 பெறுமதியில் கேள்வி கையளிக்கப்பட் டிருந்தது. எனினும் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு குறித்து ரைத்த திகதியில் புதுப்பிக்காமையின் காரணமாக அது தொடர்பாக விசாரணை செய்யாமல் 2019 செப்டெம்பர் 06 ஆம் திகதி மூடப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு ஆகக் குறைந்த கூறுவிலை சமர்ப்பித்த REDECO கம்பனி நிராகரிக்கப்பட்டு இன்னுமொரு தனியார் கம்பனி தெரிவு செய்யப்பட்டிருந்தது. எனினும் 2013 ஆகஸ்ட் 30 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மான இலக்கம் 13/1114/503/085 இன் பிரகாரம் பொதுவான கேள்வி நடைமுறை களுக்கு புறம்பாக ரூபா 30 மில்லியன் வரையான ஒப்பந்தம் றெடிக்கோ (REDECO) கம்பனிக்கு வழங்குவதற்கு அரச நிறுவனங்களுக்கு அதிகாரம் கையளிக்கப்பட்டிருந்தது. | கட்டிடப் பராமரிப்பிற்குரிய 16 வேலைகளாக அலகொன்றைப் பேணிச் செல்வதுடன் இந்த செயற்திட்டம் கையேற்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அரசாங்க தொழிற்சாலைகளின் சிவில் பொறியலாளர் சேவையில் ஈடுபட்டிருந்தார். திணைக்களம் பயன்படுத்தப்பட்ட ஊழியர்களின் சம்பளம் மற்றும் படிகளை உள்ளடக்கி வேலைத் தளங்களுக்குரிய ஏனைய கிரயம் இந்த பிரிவின் மூலம் உழைக்க வேண்டியிருந்தது. அதன் பிரகாரம் இவ்வாறான படிகள் அரசாங்கத் தொழிற்சாலைகளினால் கையேற்கப்பட்டவுடன் அதனிடையே தொழிற்சாலைகளில் காணப்படுகின்ற மனித வளங்களை உள்ளடக்கி ஏனைய வளங்களைப் பயன்படுத்தி இந்தப் | திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்ட நோக்கம் மற்றும் பணிகளுக்கு இணங்க செயற்படுவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பணிகளை நிறைவேற்றுதல் வசதியீனமான சந்தர்ப்பங்களின் போது மாத்திரம் அவை வெளி நிறுவனங்கள் மூலம் நிறைவேற்றப்படுகின்றது. | |
| ii. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.9.1 பிரிவின் பிரகாரம் ஒப்பந்தத்திற்காக முறையான மாதிரிப் படிவத்தின் கீழ் அதற்கு இணங்க முறையான நிபந்தனைகளுடன் உடன்படிக் கையில் உள்ளடக்க வேண்டியிருந்த போதிலும் 2019 ஒக்டோபர் 25 ஆம் திகதி ஒப்பந்தகார ருடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையில் அவ்வாறான சட்ட ரீதியான தன்மையொன்று காணப்படவில்லை. | அதற்காக வேலை மற்றும் சேவைகளுக்கான ICTAD நிறுவனத்தில் விநியோகிக் கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட கேள்வி கோரல் படிவ பத்திரங்களில் குறிப்பிடப்பட்ட முறையான உடன்படிக்கை பத்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றது. அந்த உடன்படிக்கை மாதிரிப் படிவங்கள் மற்றும் உடன்படிக்கை செய்யும் போது அதற்குரிய சகல கேள்வி கோரல் தகவல்களும் இந்த உடன்படிக்கையின் மூலம் வெளிப்படுகின்றமை யினால் அந்த உடன்படிக்கை செய்யப்பட்டமை சட்ட ரீதியாக இருந்தது எங்களின் கருத்தாகும். | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் முறையான விரைவான உடன்படிக்கை யில் கைச்சாத்திடல் வேண்டும். |
| iii | ஒப்பந்தக்காரக் கம்பனியால் ஒவ்வொரு விடயத்திற்கும் அனுப்பப்பட்ட விலை வீதம் மற்றும் பொறியியலாளர் மதிப்பீட்டிற்கிடையே 8 சதவீதம் முதல் 409 சதவீதம் வரையிலான முரண்கள் காணப்பட்டது. இது தொடர்பாக பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 7.9.11 பிரிவின் பிரகாரம் ஒப்பந்தகாரரிடமிருந்து காரண விளக்கம் பெற்றுக்கொள்வதற்கு அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் வழங்கப்பட்டிருந்த அறிக்கையின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டு நடவடிக்கைகள் ஒவ்வொரு விடயத்திற்கும் தனித்தனியாக கவனத்திற் கொள்ளாமல் பொதுவாக மேற்கொள்ளப்பட்டிருந்ததுட ன் மொத்த மதிப்பீட்டு பெறுமதி பொறியியலாளர் மதிப்பீட்டில் காணப்படுகின்றமையால் இந்த ஒப்பந்தம் ஆகக் குறைந்த கேள்விதாரருக்கு கையளிப்பதற்கு தீர்மானிக் கப்பட்டிருந்தது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| iv | இவ்வாறு நவீனமயப்படுத்தப்பட்ட வெகுசன ஊடகத்துறை அமைச்சின் கட்டிடம் மழை நாட்களில் நீரினால் நிரம்பி இருந்தமையினால் தற்போது பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டது. அவ்வாறான நிலைமையின் போது செயலாற்றல் பிணை முறியை விடுவிப்பதற்காக 2022 பெப்ருவரி 23 ஆம் திகதி ஒப்பந்தகாரரால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கை திணைக்களத்தால் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. | உரிய கட்டிடம் அவர்களுக்கு கையளிக்கப் பட்டு செயலாற்றல் பிணை முறியை விடுவிப்பதற்காக பரிந்துரை வழங்கப்பட்டிருந்த பின் புலத்தில் செயலாற்றல் பிணை முறியை வழங்கல் நிறுவனத்தால் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | செயலாற்றல் பிணைமுறியை விடுவிப்பதற்கு முன் நிர்மாணப் பணிகளை சகல வேலைகளையும் பூர்த்தி செய்யும் பொறுப்பை நிறைவேற்றுதல் வேண்டும். |
| v | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.6(அ) இன் பிரகாரம் ஒப்பந்தகாரருக்கு செலுத்த வேண்டிய சகல கொடுப்பனவுகளும் குறித்துரைத்த தொகையொன்றை நிறத்தி வைத்தல் தொகையாக பெறுகை நிறுவனத்தால் நிறுத்திவைக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு வைக்கப்பட்டிருக்க வில்லை. | தற்போது இறுதிக் கொடுப்பனவுகள் மேற் கொள்ளப்படாதிருந்தமையால் உரிய சரிசெய்தல் களுடன் மிகுதி கொடுப்பனவுகளை மேற் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | ஒப்பந்தகாரருக்கு வழங்கப்படுகின்ற சகல கொடுப்பனவு களிலும் குறித்துரைத்த தொகை நிறுத்திவைக்கப் படல் வேண்டும். |

**3.3 எதிர்பார்க்கப்பட்ட பூர்த்திமட்டம் அடையப்பெறாமை.**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரசாங்க தொழிற்சாலையில் முன்னர் காணப்பட்ட பழைய கணனி மென்பொருள் முறைமையில் குறைபாடுகளின் காரணமாக முறைமையை அபிவிருத்தி செய்வதற்காக 2021 ஆம் ஆண்டின் போது கூறுவிலை கோரி தனியார் வழங்குநர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டு உரிய வழங்குநருக்கு ரூபா 2,954,700 தொகை 2021 திசம்பர் 31 ஆம் திகதி செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |

| | | | |
|---|---|---|---|
| i. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.8.1 (அ) இன் பிரகாரம் எந்தவொரு அங்கத்தவரும் பெறுகைக்குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு என்ற இரண்டிலும் இருக்க முடியாதிருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும் இதில் ஒரு உத்தியோகத்தர் குழு இரண்டிலும் சேவையாற்றி இருந்தார். மேலும் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.8.1(ஆ) இன் பிரகாரம் விடயம் தொடர்பான விசேட நிபுணத்துத்துடன் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவை உள்ளடக்கியிருக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான அங்கத்தவர் நியமிக் கப்பட்டிருக்கவில்லை. | ஒரே உத்தியோகத்தர் குழு இரண்டிலும் சேவை யாற்றியதை ஏற்றுக் கொள்வதுடன் அது தகவல் தொழில்நுட்ப சேவையில் சிறந்த அறிவு மற்றும் அனுபவத்துடன் உத்தியோகத்தின் இருக்காமையின் அடிப்படையில் இடம் பெற்ற போதும் எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகளை மேற் கொள்ளும் போது இவ்வாறான தகவல் தொழில்நுட்ப சேவையின் உத்தியோகத்தரை ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பெறுகைகள் மற்றும் தெழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்படல் வேண்டும். |
| ii. | மீண்டும் கட்டளையிடும் மட்டத்தின் போது களஞ்சியக் கட்டளையிடல் சுயமாக செயற்பட்டு அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படுவதாக மாதிரிகளில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் கையினால் எழுதப்பட்ட களஞ்சியக் கட்டளை கொள்வனவு பிரிவிற்கு சமர்ப்பிக்கப்படுகின்றமை 2024.03.01 ஆந் திகதிய கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. மேலும் மதிப்பீட்டுப் பெறுமதி முறைமையில் உருவாக்குவதற்கு வசதியினை வழங்குவதாக மாதிரியில் காண்பிக்கப்பட்ட போதிலும் 2023 ஆம் ஆண்டிற்காக வழங்கப்பட்ட திரண்ட வேலை விழிப்பு அறிக்கையில் மதிப்பீடு செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் ஊழியர் கிரயம் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. இதன் காரணமாக உள்ளபடியான செலவினம் மற்றும் மதிப்பீடு செய்யப்பட்ட செலவினத்திற்கிடையே முரண்கள் காணப்படுதல் செயலாற்றல் செயற் பாட்டுப் பத்திரங்களின் மூலப்பொருள் மற்றும் ஊழியம் இல்லையாயின் ஏனைய பொதுப் பணி செலவினங்களும் அவ்வாறு உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | முறைமையை சரிசெய்து தற்போது நிறைவேற்றப் பட்ட பின்புலத்தில் முறைமையை பராமரித்தல் தொடர்பான உடன்படிக்கை தற்போது எதிலும் கைச்சாத்திடப்படாதிருந் தமையை அறியத் தருகின்றோம். முறைமையை மீண்டும் சிறந்த நிலையில் அபிவிருத்தி செய்து வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் பொருத்தமான பிரகாரம் தொழில்நுட்ப அறிக்கையொன்றை கோரி இது தொடர்பாக தீர்மானம் ஒன்றை எடுப்பதற்கு எதிர்பார்க்கின்றோம். | முறைமையை ஸ்தாபித்தல் மற்றும் அபிவிருத்தி செய்யும் நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு FMS முறைமை மூலம் உருவாகின்ற இருப்பு மீதி தொடர்பான தகவல்கள் கணக்காய்வினால் கோரப்பட்டிருந்த போதிலும் நாளதுவரையாக்கப்பட்ட அவ்வாறான அறிக்கையொன்று முறைமை ஊடாக உருவாக்கப்பட்டு வழங்கப் படாதிருந்ததுடன் கணக்குகள் பிரிவினால் தயாரிக்கப்பட்ட இருப்பு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த அறிக்கையின் விடயங்களில் எந்தவொரு திகதியோ அல்லது காலப் பகுதியோ காணப்படாதிருந்ததுடன் இருப்பு அறிக்கையில் ரூபா 1,723,305 பெறுமதியான 04 மறைப் பெறுமதி குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந்த மீதியில் இருப்புப் புத்தகங்களின் பிரகாரம் கண்டறிய முடியாதிருந்தது. | FMS முறைமையில் 2023.12.31 இல் இருப்பு மீதி கணிப்பிடுவதற்கு வசதி வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த மீதி நிலையான சொத்து மெய்மையாய்வின் போது உறுதிப்படுத்துவதற்கு வசதிகள் வழங்கப்பட டுள்ளது. இந்த பணிகள் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ள முடியாதிருந்ததுடன் அதன் காரணமாக 2023 ஆம் ஆண்டிற்கு இந்த அறிக்கை பெற முடியாதிருந்தது. 2024.12.31 இல் உள்ளவாறு இருப்பு மீதி கணிப்பிட்டு இதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முறைமை ஸ்தாபித்தல் மற்றும் அபிவிருத்தி செய்யப்பட்டன் நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தபால் திணைக்களத்தின் போக்குவரத்துப் பிரிவிற்காக தற்காலிக கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 104,412,899 ஆன மதிப்பீட்டில் தபால் திணைக்களம் இணங்கி 2018 திசம்பர் 31 ஆம் திகதி ரூபா 3,795,000 செலுத்தப்பட்டிருந்தது. எனினும் உரிய நிர்மாணத்திற்கு உத்தேசிக்கப்பட்ட காணி பின்னர் பொருத்தமற்றதாக 2019 சனவரி 13 ஆந் திகதி நடைபெற்ற கலந்துரையாடலின் போது உறுதிப்பட்டமையால் புதிதாக தயாரிக்கப்பட்ட திட்டத்தின் பிரகாரம் வேறொரு இடத்தில் நிர்மாணிப்பது என காண்பிக்கப்பட்டு மேலும் ரூபா 10,710,572 தொகை 2019 மார்ச் 14 ஆம் திகதியும் மற்றும் ரூபா 7,694,000 தொகை 2020 மார்ச் 06 ஆம் திகதியும் | இந்த நிர்மாணத்திற்கு உரிய தபால் திணைக்களத்தால் அந்தந்த நிறுவனங்களிலிருந்து பெற வேண்டிய அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளல் தொடர்ச்சியாக தாமதமடைந்தமையினால் பணிகள் ஆரம்பித்தல் இது வரை தாமதம் அடைந்துள்ளது. மாற்று வழிகளுக்கு செல்லுதல் தொடர்பான முன்மொழிவுடன் அறிக்கை ஒன்று தபால் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிர்மாண செயற்திட்டங்களை மேற்கொள்ளல் திணைக்களத்தின் விடயப் பரப்பிற்கு இல்லாதிருந்தமையால் பராமரிப்பு / பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் தவிர ஏனைய ஆபத்துடனான செயற் திட்டங்களைக் கையேற்காதிருத்தல் வேண்டும். |

ஆக கூட்டுமொத்தமாக ரூபா 22,199,572 இந்த திணைக்களத்திற்கு தபால் திணைக்களத்திலிருந்து அறவிடப்பட்டிருந்தது. எனினும் 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தில் செயல் முன்னேற்றம் 10 சதவீதம் மாத்திரம் ஆகும். 05 வருடங்கள் கடந்திருந்த போதிலும் செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கோ அல்லது பெறப்பட்ட பணத்தை மீளச் செலுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்திற்குரிய பொலன்னறுவையில் அமைந்துள்ள 24 உத்தியோகபூர்வ இல்லங்களின் குளியல் அறைகளில் நீர் கசிவினைப் பழுதுபார்க்காமையின் காரணமாக பயன்படுத்தப்படாமல் குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தது. | நீர் கசிவு காணப்படுகின்ற 24 வீடுகளில் 11 இல் மாத்திரம் மீண்டும் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப் பட்டுள்ளதுடன் மிகுதி வீடுகளை பழுதுபார்ப்பதற்காக வழங்குவதற்கான நடவடிக்கைகள் தயாரிக்கப் பட்டுள்ளது. | திணைக்களத்திற்குச் சொந்தமான சொத்துக்களை பயன்படுத்தக் கூடிய வகையில் பழுதுபார்த்து உரிய பிரகாரம் பராமரிப்பதற்கு கவனம் செலுத்துதல் வேண்டும். |
| (ஆ) | திணைக்கள வளவில் திறந்த வெளியில் எந்த வொரு பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் வெயில் மழைக்கும் உட்பட்டு துருப்பிடித்த நிலையில் பல வருடகாலமாக காணப்படுகின்ற பெறுமதியான வாகனங்கள், இயந்திர பொறி முறைகள் போன்ற கணிசமான அளவொன்று அவதானிக்கப்பட்டதுடன் அவை தொடர்பாக திணைக்களம் எந்தவொரு நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. இந்த சொத்துகள் நிதிப் பிரமாணம் 445 இன் பிரகாரம் பொருட் பதிவேடுகளில் உள்ள நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளக்கப்பட்டிருந்ததா எனவும், அவற்றின் பெறுமதியை எவ்வளவு எனவும் இனங்காண்பதற்கு | திணைக்கள கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டத்தின் போது வழங்கப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் அலுவலக வளவில் காணப்படுகின்ற உரிய பிரிவுகளில் பொருட்டில் உள்ளடக்கப்படாத சொத்துக்களை இனங்கண்டு ஏடுகளில் உள்ளடக்குவதற்காக குழுவொன்று ஊடாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சொத்துக்களை உரிய பிரகாரம் முகாமைத்துவம் செய்வதற்கோ அல்லது விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தேவையான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் பொருள் மெய்மை ஆய்வில் இது தொடர்பாக அறிக்கையிடப்படாதிருந்ததுடன் இதன் காரணமாக நிதிப் பிரமாணம் 756 இன் பிரகாரம் பொருள் மெய்மை ஆய்வு மேற் கொள்ளப்பட்டமை கணக்காய்வில் ஏற்றுக் கொள்ளமுடியாதிருந்தது. | | |
| (இ) | விற்பனை செய்வதற்காக திணைக்களத்தால் உற்பத்தி செய்யப்படுகின்ற இயந்திரங்கள் மற்றும் துணைப்பாகங்கள் விற்பனை செய்யப்படாமல் துருப்பிடித்த நிலையில் களஞ்சில் வைக்கப்பட்டிருந்தமை பௌதீகப் பரிசோதனையின் போது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. திணைக்களத்தின் விற்பனை பிரிவினால் இந்தப் பொருட்களுக்காக எந்தவொரு விளம்பரமும் வழங்கப்படாதிருந்தமையும் காட்சிக்கூடமாக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் கண்காய்வினால் பரீட்சிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் மூடப்பட்டு இருந்தமையும் அவதானிக்கப்பட்டது. அவ்வாறே இந்த காட்சிக்கூடம் பெருந்தெருக்கல் பிரயாணம் செய்யப்படுகின்ற எந்தவொரு நபருக்கும் ஒரே தடவையில் இனங்காணக்கூடிய மற்றும் கவர்ச்சிகரமான இடமாக இல்லாதிருந்தமையும் திணைக்களத்திற்கு சொந்தமாகவுள்ள பெறுமதிமிக்க காணிகளின் சொத்துக்களிலும் இவ்வாறான முறையில் எந்தவொரு பயன்பாட்டிற்கு எடுப்பதற்கும் முயற்சி எடுக்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | விற்பனைக்காக திணைக்களத்தால் உற்பத்தி செய்யப்படுகின்ற இயந்திரங்கள் மற்றும் துணைப்பாகங்கள் அந்த அந்த சந்தர்ப்பங்களின் போது சந்தையின் கேள்வி நிரம்பலில் ஒவ்வொரு சந்தர்ப்பங்களின் போதும் அரசாங்கத்தால் எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் போன்ற எதிர்பார்க்கப்படாத காரணங்களினால் விற்பனை செய்வதற்கு முடியாதிருந்தது. திணைக்களத்தின் காட்சிக் கூடத்தை முறையான பிரகாரம் பேணிச் செல்லல் ஊழியர் பற்றாக்குறையின் காரணமாக பிரச்சினையாக இருந்தது. | வேலைக் தளங்களுக்காக கிடைக்கின்ற ஒப்பந்தங்கள் குறைவடைந்த தன் அடிப்படையில் விளைவற்றுக் காணப்படுகின்ற ஊழித்தைப் பயன்படுத்தி குறைவாகப் பயன்படுத்தப்பட்ட காட்சிக்கூடம் மற்றும் உற்பத்தி செய்யப்படுகின்ற இயந்திரங்கள் மற்றும் துணைப் பாகங்களில் இருந்தும் வருமானத்தை உழைத்துக் கொள்வதற்கு எடுத்தல் வேண்டும். |

### 3.6 முகாமைத்துவ நலிவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **அரசாங்கத்தின் இல்லங்களை பேணிச் செல்லல்.** | | |
| i. | அரசாங்க தொழிற்சாலைகளின் சங்ஹிந்த செலவன வீடுகளில் காணப்பட்ட மோசடிகள் தொடர்பாக பாதிப்பிற்கு உட்பட்ட சங்ஹிந்த செவன மாடி வீட்டு திட்டத்தில் குடியிருக்கின்ற திணைக்கள ஊழியர்களினால் பொலிஸ்மா அதிபருக்கும் பிரதியுடன் ஊடகவியலாளருக்கும் அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரகாரம் ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்கள் அரசாங்க வீடுகளைப் பயன்படுத்துதல், வெளிநாடு சென்ற பின்னரும் குடியிருத்தல், அரசாங்கத்தின் வீடுகள் ஏனைய தரப்பினருக்கு வாடகைக்கு வழங்குதல், ஐஸ் போதைப் பொருள் பயன்பாடு, ஊழியர்கள் வேலை நீக்கத்திற்கு உட்பட்டிருக்கும் போது அரசாங்கத்தின் வீடுகளைப் பயன்படுத்துதல், செல்லப் பிராணிகளை வளர்த்தல், வீடுகள் அதிகாரத் தரப்பினரால் பரீட்சிக்கப்படாமை போன்ற விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் 2023 நவம்பர் 10 ஆம் திகதி இறுதித் தடவையாக குடியிருந்த வீட்டு குழுவினால் 26 வீடுகள் மாத்திரம் பரீட்சிக்கப்பட்டிருந்ததுடன் மிகுதி வீடுகளும் பரீட்சித்து தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு 2024 ஏப்ரல் 01 கணக்காய்வுத் திகதி வரையிலும் தவறியிருந்தது. | ஓய்வுபெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களுக்கு உத்தியோகபூர்வ இல்லங்கள் வழங்கப்பட வில்லை. வெளிநாடு சென்ற உத்தியோகத்தர்களின் வீடுகள் மீளக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. ஏனைய வெளித்தரப்பினர்களுக்கு உத்தியோகபூர்வ இல்லங்களை வாடகைக்கு வழங்கியிருந்தமை வெளிப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு தண்டப் பண வாடகை அறவிட்டு அந்த வீடுகளை மீண்டும் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் ஐஸ், போதைப் பொருள் பயன்படுத்தல் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்வதற்கு உடனடியாக பொலிஸிற்கு அறிவிப்பதற்கு தேவையான நடவடிகக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அரசாங்கத்தின் வீடுகளை பயன்படுத்தும் போது பின்பற்றப்பட வேண்டிய ஆலோசனைகளைப் பின்பற்றாத உத்தியோகத்தர்களுக்கு எதிராக தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ii | திணைக்களத்தில் இருந்து வெளியே இடமாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர் குடியிருக்கின்ற 21/18 என்ற வீட்டில் உடன்படிக்கைக் காலம் 2023 பெப்ரவரி 11 ஆம் திகதி முடிவடைந்திருந்ததுடன் உத்தியோகத்தர் தற்போது வரை உரிய வீட்டைக் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. தாபனவிதிக் | 21/8 வீடு 2024.02.26 ஆம் திகதி மீண்டும் இந்தத் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது. அத் திகதி வரை தண்டப்பணம் வாடகை செலுத்த வேண்டிய மொத்தத் தொகையான ரூபா 810,134.86 | புதிய சேவை நிலையம் ஊடாக நிலுவை வாடகை மற்றும் தண்டப் பணத்தை அறவிடுவதற்கு தாமதமின்றி |

| | | | |
|---|---|---|---|
| | கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 7.2 ஆம் பிரிவின் பிரகாரம் அவரிடமிருந்து அறவிட வேண்டிய தண்டப்பண வாடகை மற்றும் திறந்த சந்தையில் வாடகை என்ற இரண்டில் கூட்டு மொத்தமாக ரூபா 679,851 தொகை 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டி காணப்பட்டது. | தொகையை அறவிட்டு அனுப்புமாறு இலக்கம் 01/3/4/11(21/8) மற்றும் 2024.04.03 ஆம் திகதிய நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் நகர அபிவித்திப் பிரிவின் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அரச நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் நடாத்தப்படுகின்ற தேசிய விழாக்களுக்காக மேடைகளை நிர்மாணிக்கும் பணிகள் அரசாங்க தொழிற்சாலை திணைக்களத்தால் மேற்கொள்ளப்படுவதுடன் 2023 ஆம் ஆண்டின் போதும் இதற்காக ரூபா 54,164,000 பெறுமதியான பட்டியல் சமர்ப்பித்து உரிய செலவினத் தலைப்பில் வரவு வைக்கப் பட்டிருந்தது. இதற்காக பயன்படுத்தப்படுகின்ற GI குழாய், H இரும்பு, அமானோ தகரம், கொச் தூண் போன்ற ஏனைய மூலப்பொருட் கள் கணிசமான அளவில் இதற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் இந்த இருப்புக்கள் தொடர்பாக எந்தவொரு இருப்பு பேரேடும் களஞ்சியத்தில் பேணிச் செல்லப்படாதிருந்ததுடன் இந்த இருப்புக்கள் எவ்வளவு அளவு என்பதும் உறுதிப்படுத்தப் படவில்லை. இந்த மேடைகளை நிர்மாணிப் பதற்கான மூலப் பொருள், இருப்புக்கள் தொடர்ந்தும் பேணிச் செல்லப்பட வேண்டி யிருந்த போதிலும் அவசர தேவையின் அடிப்படையில் விடயங்களைக் கொள்வனவு செய்வதற்காக முற்பணமாக ரூபா 10,000 தொகை, ரூபா 20,000 மற்றும் ரூபா 25,000 ஆக தொடர்ச்சியாக பணம் பெறப்பட்டு திணைக்களத்திற்கு அருவில் உள்ள ஹாட்வேயா கடைக் கொட்டகைகளின் மூலம் கடைகளிலிருந்து அவ்வப்போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | தேசிய சுதந்திர தின விழாவில் நிர்மாணிப்ப தற்காக Box bar, Z perline தகரம், H iron போன்ற மூலப் பொருட்கள் களஞ்சியப்படுத் தப்பட்டிருந்த நிற வர்ணங்கள் ஒவ்வொரு வருடமும் நிர்மாணத்திற்காக பயன்படுத்தப்படுகின்றது. எனினும் நிறங்கள், ஆணிகள், ஒட்டும் மூலப் பொருட்கள் ஒவ்வொரு வருடமும் கொள்வனவு செய்யப்படுகின்றது. மேலும் Carpet மற்றும் plywood sheet தேவையான அளவில் கொள்வனவு செய்யப்படுகின்றது. இந்த மூலப்பொருட்கள் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அவசர கொள்வனவுக்குத் தேவையான சரநேர் சீட் ஆணி ஒட்டும் மூலப் பொருட்கள் போன்ற மூலப்பொருட்கள் அருகிலுள்ள நிறுவனங்களின் மூலம் முற்பணத்தைப் பயன்படுத்தி கொள்வனவு செய்யப்படுகின்றது. | அரச நிர்வாக உள்நாட்டலுவ ல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்குரி ய இந்த மூலப் பொருள் இருப்பை குறித்துரைத்த பிரகாரம் பதிவேடுகளுக் கு கொண்டு வந்து மீதியை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான, வெற்றிடமான பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது. மீளாய்வாண்டிற்காக ஆளணி வேதனங்கள் செலவினத் தொகுதிக்காக ரூபா 88,317,269 செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒரு நபரின் செலவினம் ரூபா 276,857 ஆக காணப்பட்டது.

| நிலை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடம் / மிகை |
|---|---|---|---|
| சிரேஸ்ட நிலை | 31 | 17 | 14 |
| மூன்றாம் நிலை | 10 | 02 | 08 |
| இரண்டாம் நிலை | 282 | 131 | 151 |
| ஆரம்ப நிலை | 446 | 169 | 277 |
| **மொத்தம்** | **769** | **319** | **450** |

450 பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கோ அல்லது தேவையான பிரகாரம் பதவிகளின் எண்ணிக்கையை திருத்திக் கொள்வதற்கோ திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.